NEW ZEALAND
IMMIGRATION

# நியூசிலாந்தில் அகதி மற்றும் பாதுகாப்பு தகுதி கோருதல்

MINISTRY OF BUSINESS,
INNOVATION & EMPLOYMENT
HĪKINA WHAKATUTUKI

இந்தப் புத்தகம் அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபருக்கான தகுதி (அடைக்கலம்) கோரிக்கைகளை எவ்வாறு பரிசீலிக்கிறது என்பதை விளக்குகிறது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அகதி மற்றும் பாதுகாப்பு கோருதல் செயல்முறை வரைபடம் | | 2 |
| அறிமுகம் | | 3 |
| 1. | ஒரு அகதி மற்றும் பாதுகாக்கப்பட்ட நபர் என்றால் என்ன? | 4 |
| 2. | அடைக்கல நடைமுறை | 5 |
| 2.1 | பிரதிநிதித்துவம் | 5 |
| 2.2 | உங்கள் கோருதலைப் பதிவு செய்தல் | 6 |
| 2.3 | அகதி நிலை கிளையில் | 7 |
| 2.4 | முடிவு | 10 |
| 2.5 | கூடுதல் தகவல் | 11 |
| 2.6 | அடுத்துவருகிற அகதி மற்றும் பாதுகாப்பு கோருதல்கள் | 12 |
| 3. | அடைக்காலம் நாடுபவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் | 13 |
| 3.1 | உங்கள் உரிமைகள் | 13 |
| 3.2 | உங்கள் பொறுப்புகள் | 13 |
| சொல்விளக்கத் தொகுதி | | 15 |
| தொடர்புகள் | | 16 |


பிரசுரித்த தேதி: ஜூலை 2014

ISBN: 978-0-478-43301-2 (அச்சில்)

ISBN: 978-0-478-43302-9 (ஆன் லைனில்)

New Zealand Government

# அகதி மற்றும் பாதுகாப்பு கோருதல் செயல்முறை வரைபடம்








# அறிமுகம்

## நியூசிலாந்தில் நீங்கள் அடைக்கலம் கோரியிருக்கிறீர்கள். இந்த சிற்றேட்டின் நோக்கம் அகதி மற்றும் பாதுகாப்பு செயல்முறைகளோடு, உங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் மீதான தகவல்களையும் வழங்குவதாகும்.

ஒரு அடைக்கலம் கோருபவர் என்பவர் தனது தாய் நாட்டுக்கு திரும்புவதற்கு அஞ்சுபவர் மற்றும் அகதி அல்லது “பாதுகாக்கப்பட்ட நபருக்கான” தகுதியைக் கோருபவர்.

நியூசிலாந்தில் அடைக்கலம் கோருதல்கள் 2009ஆம் ஆண்டு குடியமர்வு சட்டத்திற்கு (சட்டம்) ஏற்ப முடிவு செய்யப்படுகின்றன. இந்த சட்டத்தின் நோக்கங்களுள் ஒன்று அகதிகளின் நிலைத் தொடர்பான 1951 மாநாட்டின் கீழும், சித்ரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவாக நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான 1984 மாநட்டின் அல்லது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான 1966 சர்வதேச உடன்படிக்கையின்படியும் தனது கடமைகளை நியூசிலாந்து நிறைவு செய்வதை உறுதி செய்வதாகும்.

நியூசிலாந்தின் குடிவரவின் (INZ) ஒரு பகுதியான, அகதி நிலை கிளையினால் (RSB) உங்களின் கோருதல் தீர்மானிக்கப்படுகிறது.

உங்கள் அடைக்கலம் கோருதல் செயல்படுத்தப்படும் போது உங்களை நியூசிலாந்திலிருந்து வெளியேற்ற முடியாது.

நீங்கள் ஒரு அகதியாகவோ அல்லது பாதுகாக்கப்பட்ட நபராகவோ அங்கீகரிக்கப்பட்டால், நீங்கள் நியூசிலாந்தில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவீர்கள். நீங்கள் ஒரு அகதியாகவோ அல்லது பாதுகாக்கப்பட்ட நபராகவோ அங்கீகரிக்கப்படவில்லை என்றால், நீங்கள் நியூசிலாந்தை விட்டு வெளியேற வேண்டியிருக்கும்.

அடைக்கலச் செயல்முறையானது 151ஆவது சட்டப் பிரிவின் படி இரகசியமானது. கோருதலின் போது நீங்கள் வழங்கும் தகவல்கள் நியூசீலாந்து அரசுக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையாளருக்கும் உட்பட இரகசியமாக வைக்கப்படும், ஆனால் சட்டரீதியான தேவைகள் ஏற்படின் மற்றவர்களுக்கு அவை வெளியிடப்படலாம். அகதி நிலைக் கிளை உங்கள் கோருதலை விசாரிக்கக் கடமைப் பட்டுள்ளதன் காரணத்தால் சில தகவல்களை வெளியிடலாம் அல்லது வேறு காரணங்களுக்காகக் கூட இருக்கலாம், உதாரணமாக குற்றச்சாட்டு விசாரணைகள். உங்களின் அல்லது இன்னொருவரின் பாதுகாப்புக்குப் பங்கம் வராத பட்சத்திலேயே இவ்வாறு தகவல் வெளியீடு நடைபெறும்.

# 1. ஒரு அகதி மற்றும் பாதுகாக்கப்பட்ட நபர் என்றால் என்ன?

அகதி மற்றும் பாதுகாக்கப்பட்ட நபர் என்பது ஒரு சட்டப்பூர்வ தகுதியாகும். 1956 வழிகாட்டு நெறியின் கீழ் திருத்தப்பட்டவாறு அகதிகள் நிலைத் தொடர்பான 1951 மாநாட்டில் அளிக்கப்பட்டுள்ள அகதி என்பதற்கான விவரணையை நிறைவு செய்யும் மக்களே அகதிகளாவர்.

ஒரு பாதுகாக்கப்பட்ட நபர் என்பவர் 1984 சித்ரவதை, மனிதத்தன்மையின்மை அல்லது இழிவாக நடத்துதலுக்கு எதிரான மாநாடு (சித்ரவதைக்கு எதிரான மரபு) மற்றும் / அல்லது சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை 1966-யின் படி ஒரு நபரை நியூசிலாந்திலிருந்து வெளியேற்றுவது விதிமீறல் எனக்கருதப்படும் நபராவார்.

விரிவாக சொல்லவேண்டும் என்றால் ஒரு அகதி என்கிற நபர்:

- தனது தாய் நாட்டிலிருந்து அல்லது தான் வழக்கமாக வசிக்கும் நாட்டிற்கு வெளியே இருப்பவர்
- அந்த நாட்டிற்கு திரும்பப் போனால் ஊறு செய்யப்படுவதற்கான உண்மையான வாய்ப்பினை எதிர்கொள்பவர்
- எதிர்கொள்ளப்படும் ஊறு நீடிப்பதாகவோ அல்லது அடிப்படை மனித உரிமையை மீறியதாகவோ இருப்பது.
- அந்த நபர் யார், அல்லது அவர்கள் எதை நம்புகிறார்கள் என்ற காரணங்களுக்காக ஊறினை எதிர் கொள்கிறவர். அந்தக் காரணமானது இனம் (அல்லது வம்சாவளி), மதம், அரசியல் கருத்து, தேசிய அந்தஸ்து அல்லது குறிப்பிட்ட சமூகக் குழுவின் உறுப்பினராக இருப்பதாக (குடும்பத் தகுதி, பாலினம், அல்லது பாலின சார்பு அல்லது அடையாளம் போன்றவை) இருக்கலாம்.
- நியூசிலாந்தில் பாதுகாப்புத் தேவைப்படுபவராகவும் அதற்கு உரியவராக இருப்பவர்.

ஒரு பாதுகாக்கப்பட்ட நபர் என்பவர் அவர் சித்ரவதை, வாழ்க்கைக்கான ஒரு தலைப்பட்சமான கையறுநிலை அல்லது கொடூரமாக நடத்துப்படுதலுக்கான ஆபத்தில் இருக்கலாம் என்று நம்புவதற்கான போதுமான அடிப்படைகள் இருக்கக் கூடிய ஒரு நபராவார்.

கொடூரமாக நடத்துதல் என்பது கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவுப்படுத்தும் வகையில் நடத்துவது அல்லது தண்டனைக்கான ஒரு செயலாகும்[1].

தங்கள் நாடு அல்லது மூன்றாம் நாட்டின் அதிகாரிகளிடமிருந்து ஆற்றல் மிக்க பாதுகாப்பை ஒரு நபர் பெறலாம் என்றால், நியூசிலாந்து அவர்களை பாதுகாப்பதற்கு கடமைப்பட்டிருக்கவில்லை.

போர் குற்றங்கள் அல்லது மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் போன்ற தீவிரமான குற்றங்களை ஒருவர் செய்திருப்பதாக கருதுவதற்கான தீவிரமான காரணங்கள் ஏதுமிருந்தால் அவர் அகதிகள் நிலையிலிருந்து விலக்கப்படலாம்.

1 பிரிவு 131(6).



# 2. அடைக்கல நடைமுறை

நியூசிலாந்தில் அடைக்கலத்திற்கான உங்களின் கோருதலை செயல்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும் அதிகார அமைப்புகள் பின்வருமாறு:

- அகதி தகுதி கிளை (RSB)
- குடியமர்வு மற்றும் பாதுகாப்பு தீர்ப்பாயம் (ட்ரிப்யூனல்)

அகதி மற்றும் பாதுகாப்பு நிலைக்கான உங்களின் கோருதலை RSB முடிவு செய்யும். RSB உங்கள் கோருதலை நிராகரித்தால், தீர்ப்பாயத்தில் முடிவினை மேல் முறையீடு செய்வதற்கான உரிமை பொதுவாக உங்களுக்கு இருக்கும்.

நீங்கள் அடைக்கலம் கோரலாம்:

- நீங்கள் நியூசிலாந்தில் வந்தடையும் போது (எ.கா. விமானநிலையத்தில் அல்லது துறைமுகத்தில்)
- நீங்கள் அடைக்கலம் கோர எண்ணியுள்ளீர்கள் என்தை நியூசிலாந்தில் ஒரு குடியமர்வு அதிகாரி அல்லது ஒரு அகதி மற்றும் பாதுகாப்பு அதிகாரி போன்ற அரசு அதிகாரிகளிடம் அல்லது காவலரிடம் ஆலோசிப்பதன் மூலம்

## 2.1 பிரதிநிதித்துவம்

ஒரு பிரதிநிதி என்பவர் உங்கள் அடைக்கலத்துக்கான கோருதலுக்குப் பொருந்தக்கூடிய சட்டங்கள் பற்றி உங்களுக்கு ஆலோசனை தரக்கூடிய மற்றும் செயல்முறை முழுவதும் உங்களுக்கு உதவக்கூடிய ஒருவர். ஒரு அடைக்கலம் கோருதலை பதிவு செய்வதற்கு முன் ஒரு பிரதிநிதியிடம் பேசுவதற்கு நீங்கள் விரும்பலாம்.

ஒரு பிரதிநிதியை நீங்கள் பணியமர்த்த விரும்பினால், நீங்கள் ஒரு வழக்கறிஞரை (நியூசிலாந்து சட்ட சங்கத்தால் வழங்கப்பட்ட ஒரு வழக்கறிஞராக அல்லது வக்கீல் அல்லது சட்ட முகவராகப் பணியாற்றுவதற்கான தற்போதை சான்றினை வைத்திருக்கும் ஒருவர்) அல்லது குடியமர்வு ஆலோசனை ஆணையத்தால் உரிமம் வழங்கப்பட்ட ஒரு குடியமர்வு ஆலோசகரை பயன்படுத்துவதை நீங்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும். உங்கள் பிரதிநிதி உங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் ஒப்புக் கொள்ளப்பட்டத் தரங்களை நிறைவு செய்வதற்கும் முறையாக தகுதி பெற்றிருப்பதை இது உறுதி செய்யும்.

உங்களுக்கு உதவுவதற்கான ஒரு பிரதிநிதியை நீங்கள் விரும்பினால், அவரை நீங்கள் விரைவாக கண்டறிய வேண்டும், ஏனென்றால் உங்கள் பிரதிநிதியை கண்டறிவதற்காக உங்கள் கோருதலை தாமதப்படுத்த முடியாது.

ஒரு வழக்கறிஞருக்கு செலுத்துவதற்கு உங்களிடம் பணம் இல்லை என்றால், சட்ட உதவி என்கிற ஒரு அதிகாரப்பூர்வத் திட்டத்தின் மூலம் இலவச சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறலாம்.

### சட்ட உதவி

சட்ட உதவித் திட்டம் என்பது தங்களைப் பிரதிநிதித்துவம் செய்ய ஒருவருக்கு முடியாத போது அவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கான ஒரு அரசு நிதியாகும். சட்ட உதவியைப் பெறுதவற்கு சட்ட சேவைகள் முகமையில் (LSA) சட்ட உதவி பெறுவதற்காக நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும் - இதை உங்கள் வழக்கறிஞர் செய்வார்.

அனைத்து வழக்கறிஞர்களும் சட்ட உதவிப் பணியை செய்வதில்லை. சில வழக்கறிஞர்கள் இலவசமான சட்ட உதவி பற்றி உங்களிடம் கேட்பார்கள், ஆனால் வழிக்கறிஞருடன் பேசும் போது இதை நீங்கள் எப்போதும் அவர்களோடு சரி பார்க்கவேண்டும்.

### மேலும் தகவல்களுக்கு:

நீதித்துறை அமைச்சகம் தனது வலைதளத்தில் சட்ட உதவி வழக்கறிஞர்களின் ஒரு பட்டியலைக் கொண்டிருக்கிறது: http://www2.justice.govt.nz/find-a-legal-aid-lawyer/. அகதிகள் விவகாரங்களில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களைத் தேடுவதற்கு நீங்கள் “Law Type: Refugee & Immigration” என்று தேடல் செயல்பாட்டில் எழுதவேண்டும்.

எவ்வாறு சட்ட உதவி அமைப்பு பணியாற்றுகிறது என்பதை பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: http://www.justice.govt.nz/services/legal-help/legal-aid.

சமுதாய சட்ட மையங்களும் சட்ட உதவி மற்றும் ஆலோசனை, உதவி மற்றும் பிரதிநிதித்துவத்தை சட்ட உதவிகளுக்காக பணம் செலுத்த முடியாத மக்களுக்காக வழங்குகிறார்கள். மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: http://www.communitylaw.org.nz/

ஒரு வழக்கறிஞரைக் கண்டறிவதற்கான தகவலை RSBயும் உங்களுக்குத் தரலாம்.

குடியமர்வு ஆலோசகர்கள் ஆணையத்தின் இந்த வலைத் தளத்திலும் உரிமம் பெற்ற குடியமர்வு ஆலோசகர் ஒருவரை நீங்கள் தேடலாம். http://iaa.govt.nz/. உரிமம் பெற்ற குடியமர்த்தல் ஆலோசகருக்கு நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

## 2.2 உங்கள் கோருதலைப் பதிவு செய்தல்

நியூசிலாந்து படிவத்தில் அகதி மற்றும் பாதுகாப்பு நிலைக்கான கோருதலை உறுதிப்படுத்தல் (INZ 1070).

நியூசிலாந்து (கோருதலை உறுதிப்படுத்துதல்) படிவத்தில் அகதி மற்றும் பாதுகாப்பு நிலை கோருதலின் உறுதிப்படுத்தலை எழுத்துபூர்வமாக பூர்த்தி செய்வதன் மூலமாக உங்கள் கோருதலை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். இந்தப் படிவமானது இந்த RSB வலைத்தளத்தில் தரவிறக்கிக் கொள்ளலாம்: http://www.immigration.govt.nz/branch/RSBhome/

கோருதலுக்கான உறுதிப்படுத்தல் ஆங்கிலத்தில் நிறைவு செய்யப்பட வேண்டும், மற்றும் நீங்கள் ஒவ்வொரு கேள்விக்கும் பதிலளிக்க வேண்டும். நீங்கள் படிவத்தை RSBயிடம், நேரிலோ அல்லது இந்த முகவரிக்கு தபால் மூலமாக வோ சமர்ப்பிக்கவேண்டும்:

Refugee Status Branch
Level 12, 280 Queen Street, Auckland CBD

OR

PO Box 90533, Victoria Street,
Auckland 1142, DX: CX10074

மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது இணையம் வழியாகவோ மின்னணு முறையில் கோருதலுக்கான உறுதிப்படுத்தலை உங்களால் சமர்ப்பிக்க முடியாது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்

நீங்கள் ஒரு குடும்பக் குழுவின் ஒரு அங்கம் என்றால், அடைக்கலம் கோரும் ஒவ்வொரு குடும்ப உறுப்பினருக்கும் (ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு படிவத்தை உள்ளடக்கி) தனித்தனிப் படிவம் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

உங்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்தால் கோருதல் படிவத்தின் உறுதிப்படுத்தலை நிறைவு செய்ய அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

### ஆதாரமளிக்கும் ஆவணங்கள்

உங்கள் கோருதல் படிவத்தின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் பாஸ்போர்ட் (கடவுசீட்டு), ஓட்டுனர் உரிமம் மற்றும் வேறு ஏதேனும் ஆவணங்களை உள்ளடக்கி, உங்களிடம் இருக்கும் ஏதேனும் அடையாள ஆவணங்களை சமர்ப்பிப்பதை நீங்கள் சமர்ப்பிப்பதை உறுதி செய்யுங்கள்.

எந்தவொரு செல்லத்தக்க அடையாள ஆவணங்களும் இன்றி நியூசிலாந்தை நீங்கள் வந்தடைந்தால், உங்கள் கோருதல் செயல்படுத்தப்படும்போது நீங்கள் காவலில் வைக்கப்படலாம்.

அனைத்து முக்கிய ஆவணங்களையும் தக்க வைத்துக் கொள்ளவும். உங்கள் கோருதலுக்கான மதிப்பீட்டிற்காக அவை முக்கியமானவையாக இருக்கலாம்.

### உங்கள் முகவரி

நீங்கள் நியூசிலாந்தில் தங்கியிருக்கும் முகவரி மற்றும் தொலைபேசி எண்களை RSBக்கு அளிக்கவேண்டும். உங்கள் கோருதல் செயல்படுத்தப்படும்போது உங்கள் முகவரியை நீங்கள் மாற்றினால், உங்களின் புதிய முகவரி பற்றி RSBக்கு நீங்கள் தெரிவிக்கவேண்டும்.

### கடிதத் தொடர்பு

உங்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்தால், உங்கள் கோருதல் தொடர்பான அனைத்துக் கடிதத் தொடர்புகளும் உங்கள் பிரதிநிதிக்கு அனுப்பப்படும்



### உங்களுக்கு ஒரு பிரதிநிதி இல்லை என்றால்

உங்களுக்கு ஒரு பிரதிநிதி இல்லை என்றால் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில தகவல்கள் உள்ளன:

- உங்களுக்கு ஒரு தனிச்சிறப்பான வாடிக்கையாளர் எண் (உதாரணமாக "CN: 12345678") வழங்கப்படும். RSB மற்றும் INZயின் எந்தவொரு கிளைக்கும் நீங்கள் அனுப்பும் எந்தவொரு கடிதத் தொடர்பின் மீதும் உங்கள் வாடிக்கையாளர் எண்ணை நீங்கள் எழுத வேண்டும்.
- உங்கள் குடியமர்வுக் கோப்பின் ஒரு பிரதிக்கான ஒரு கோரிக்கையை நீங்கள் வைக்கலாம். இது INZ க்கு நீங்கள் செய்திருக்கக்கூடிய அனைத்து விசா விண்ணப்பங்களையும் உள்ளடக்கலாம். உங்கள் கோப்புக்கான ஒரு பிரதிக்கான கோரிக்கையை வைப்பதற்காக நீங்கள் RSBஐத் தொடர்புகொள்ளவேண்டும்:

நேரடியாக: Level 12, 280 Queen Street, Auckland CBD

தபால்: PO Box 90533, Victoria Street, Auckland 1142, DX: CX10074

தொலை பேசி: 09 914 5999

மின்னஞ்சல்: RSB@mbie.govt.nz (பொருளுக்கான வரிசையில் தயவு செய்து எழுதவும்: "கோப்பு கோருதல்", மற்றும் உங்கள் முழுப் பெயர் மற்றும் வாடிக்கையாளர் எண்ணை மின்னஞ்சலில் நீங்கள் உள்ளடக்கவேண்டும்)

## 2.3 அகதி நிலை கிளையில்

உங்கள் கோருதல் ஒரு அகதி மற்றும் பாதுகாப்பு அலுவலருக்கு (RPO) நியமிக்கப்படும்.

RSBயில் உங்கள் கோருதல் படிவத்துக்கான உறுதிப்படுத்தல் பதிவு செய்யப்பட்ட நாளில் இருந்து 140 நாட்களுக்குள் (அல்லது 20 வாரங்களில்) உங்கள் கோருதல் முடிவு செய்யப்படும்.

RSBயில் கோருதலுக்கான செயல்முறை நான்கு நிலைகளைக் கொண்டிருக்கும்:

### 1. எழுத்துப்பூர்வமாக வாக்குமூலத்தை சமர்பிக்கவும்

உங்கள் கோருதலைப் பதிவு செய்த பிறகு அகதி மற்றும் பாதுகாப்பு நிலைக்கான கோருதலுக்கு உங்களை இட்டுச் சென்ற உங்கள் அனுபவங்கள் மற்றும் சூழ்நிலைகளுக்கான ஒரு முழுமையான, எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை நீங்கள் அளிக்க வேண்டும். உங்கள் பேட்டிக்கு குறைந்தது ஒரு (1) வாரத்திற்கு முன்பாவது RSBக்கு உங்கள் வாக்கு மூலத்தை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

உங்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்தால் உங்கள் எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தை எழுதுவதற்கு அவர்கள் உங்களுக்கு உதவுவார்கள். உங்கள் வாக்குமூலம் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் மற்றும் நிகழ்வுகள் தேதி குறிப்பிடப்படவேண்டும். உங்கள் வாக்குமூலத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு:

- இரண்டு மொழிகளில் பரிச்சயமாக இருக்கக்கூடிய மற்றும் மொழிப்பெயர்ப்பு பணிக்கான திறனுள்ள ஒரு நபரால் ஒரு சரியான மொழிப்பெயர்ப்பாக சான்றளிக்கப் படவேண்டும்.
- மொழிப்பெயர்ப்பு சேவையின் அதிகாரபூர்வ முகவரியடங்கலில் இருக்கவேண்டும் அல்லது
- மொழிபெயர்ப்பாளரின் முத்திரை அல்லது கையொப்பத்தைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும்
- அசல் ஆவணங்கள் அல்லது சான்றளிக்கப்பட்டப் பிரதிகள் உடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

உங்கள் எழுத்துப்பூர்வமான வாக்கு மூலம் உங்கள் குடும்ப உறுப்பினராலோ அல்லது உங்கள் கோருதலின் விளைவினில் ஆர்வமுள்ள ஒரு நபராலோ மொழிப்பெயர்க்கப்படக் கூடாது.

தேவைப்பட்டால் எழுத்துப்பூர்வமான வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட வேண்டும் என்பது பற்றி மேலும் தகவல்களை RSB உங்களுக்கு அளிக்கலாம்.

### 2. பேட்டி

உங்கள் கோருதலைப் பதிவு செய்த ஏறத்தாழ நான்கு (4) வாரங்களுக்குப் பிறகு உங்கள் கோருதல் பற்றி RPO நேர்காணல் செய்வார்.

நேர்காணலில் உங்களிடம் கேட்கப்படுபவை:

- உங்களைப் பற்றி, உங்கள் குடும்பத்தைப் பற்றி மற்றும் உங்கள் தாய் நாட்டைப் பற்றி
- உங்கள் நாட்டுக்குத் திரும்பச் செல்ல ஏன் அச்சப்படுகிறீர்கள் என்பது பற்றி

நேர்காணலானது நியூசிலாந்தில் ஏன் அடைக்கலம் கோருகிறீர்கள் என்பது பற்றி எங்களுக்கு சொல்வதற்கான ஒரு வாய்ப்பாகும். சட்டத்தின் 135வது பிரிவின் கீழ் உங்கள் கோரிக்கையை நிலைநாட்டுவது உங்களின் பொறுப்பாகும். **நேரடியான கேள்விகள் ஏதும் கேட்கப்படவில்லை என்றாலும், உங்கள் வழக்குக்கு முக்கியமானதாக இருக்கக் கூடிய அனைத்து விவரங்களையும் நீங்கள் அளிப்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.**

தவறான தகவலை அளிப்பது, அல்லது பொருத்தமான தகவலை மறைப்பதும், ஒரு குற்றவியல் குற்றமாகும். உங்கள் கோருதலை செயல்முறைப்படுத்த RPOவுக்கு ஏதேனும் ஒரு தவறான தகவலை தந்தால், அது நீங்கள் தந்த பிற தகவல்களையும் அவரை சந்தேகிக்க வைக்கும்.

RSBயில் உங்கள் நேர்காணல் தான் உங்கள் கோருதலுக்கான முக்கியமான தருணம். உண்மையை சொல்வது முக்கியமானதாகும், ஏனென்றால் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் வாக்குமூலங்கள் உங்கள் கோருதலை நம்பமுடியாததாக்கிவிடும்.

உங்கள் அகதி மற்றும் பாதுகாப்புக் கோருதலுக்கான ஆதரவாக கருதுவதற்காக நீங்கள் விரும்பும் அனைத்துத் தகவல்கள், ஆதாரங்கள் மற்றும் சமர்ப்பிப்புகளை அளிக்க வேண்டியது உங்களின் பொறுப்பாகும். பயனுள்ள ஆவணங்களுக்கான சில உதாரணங்கள் உள்ளடக்குவன:

› உங்கள் பாஸ்போர்ட், மற்றும் உங்கள் வாழ்க்கைத் துணை மற்றும் நியூசிலாந்தில் இருக்கக்கூடிய சார்ந்திருப்பவருக்கான பாஸ்போர்ட்(கள்)
› காவல்துறை தடைநீக்கச் சான்றுகள், நீங்களோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் யாருமோ அவற்றை வைத்திருந்தால்
› உங்கள் அடையாளம் மற்றும் தேசிய அடையாளத்தை நிலைநாட்ட எங்களுக்கு உதவும் பிற ஆதாரங்கள் - இவை உள்ளடக்கக் கூடியவை அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றுகள், திருமணச் சான்றுகள், பள்ளிச் சான்றுகள், இராணுவ சேவைச் சான்றுகள் மற்றும் உறுப்பினர் அட்டைகள்
› உங்கள் கோருதலுக்கு ஆதரவளிக்கக் கூடிய ஏதேனும் பிற ஆவணங்கள்

உங்கள் கோருதலுக்கு ஆதரவாக நீங்கள் சமர்ப்பிக்க விரும்பும் அனைத்து ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட மொழிப்பெயர்ப்புகளையும் நீங்கள் அளிக்க வேண்டும்.

உங்கள் கோருதலுக்கான தப்பெண்ணம் உள்ள ஏதேனும் தகவல்களை RPO பெற்றால், அதை அவர் உங்களுக்கு வெளிப்படுத்துவார் மற்றும் இந்தத் தகவல் மீது கருத்துத் தெரிவிக்க ஒரு வாய்ப்பு உங்களுக்கு இருக்கும்.

உங்கள் நேர்காணல் மின்னணு முறையில் பதிவு செய்யப்படும் மற்றும் RPO நேர்காணலின் ஒரு எழுத்துப்பூர்வமான பதிவையும் செய்வார். பின்னர் பதிவு மற்றும் RPO நேர்காணலின் குறிப்புகளின் ஒரு பிரதியை நீங்கள் கோரலாம்.

பெரும்பாலான பேட்டிகள் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ஆக்லாந்திலிருக்கும் RSB அலுவலகத்தில் நடக்கும். சில நேரங்களில் நேர்காணல்கள் வெலிங்க்டன் மற்றும் கிரைஸ்ட்சர்சிலும் நடத்தப்படலாம்.

நீங்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தால் நீங்கள் எங்கு காவலில் வைக்கப்பட்டிருக்கிறீர்களோ (சிறையில் அல்லது மாங்கேரே அகதிகள் மறுவாழ்வு மையத்தில்) அங்கே நேர்காணல் நடத்தப்படும்.

நீங்கள் ஒரு குடும்பக் குழுவின் அங்கமாக இருந்தால், ஒவ்வொரு வயதுவந்த குடும்ப உறுப்பினரும் தனித்தனியாக RPOவால் பேட்டி காணப்படுவார். உங்கள் குடும்பக் குழு சிறார்களை (18 வயதுக்குக் கீழுள்ளவர்கள்) உள்ளடக்கி இருந்தால், சிறார் நேர்காணலில் கலந்து கொள்ளவேண்டுமா மற்றும் அவர்கள் கேள்விகள் கேட்கப்படுவார்களா என்பது பற்றி அறிவுறுத்துவார். நீங்கள் நேர்காணல் செய்யப்படும் போது நேர்காணல் அறையில் இளம் குழந்தைகள் உங்களோடு இருக்க முடியாது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும், மற்றும் நீங்கள் நேர்காணல் செய்யப்படும் போது உங்கள் குழந்தையை கவனித்துக்கொள்வதற்கான ஏற்பாட்டினை செய்ய வேண்டியது உங்களின் பொறுப்பு.





## பிரதிநிதி

உங்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்தால் அவர்கள் உங்களுடன் நேர்காணலில் கலந்து கொள்ளலாம்.

## மொழி பெயர்ப்பாளர்

உங்களுக்கு ஒருவர் தேவைப்பட்டால், நீங்கள் பேசக்கூடிய மற்றும் புரிந்து கொள்ளக்கூடிய மொழியைப் பேசும் ஒரு தனிப்பட்ட மொழிப்பெயர்ப்பாளரை RSB அளிக்கும். மொழிபெயர்ப்பாளர் நீங்கள் சொல்கிற அனைத்தையும் RPO சொல்லும் அனைத்தையும் மொழிபெயர்ப்பார். முடிவெடுக்கும் செயல்முறையில் மொழிபெயர்ப்பாளர் ஈடுபடுவதில்லை. மொழிபெயர்ப்பாளர்கள் அனைத்துத் தகவல்களையும் இரகசியமாக வைக்கவேண்டும் எனவே உங்கள் கோருதலுக்காக எந்த வொரு விவரங்களையும் RPOவிடம் சொல்வதற்கு நீங்கள் அச்சம் கொள்ள வேண்டாம்.

உங்கள் நேர்காணலின் போது மொழிபெயர்ப்புடன் ஏதேனும் பிரச்சனை இருந்தால், இந்த விவகாரத்தை RPO அல்லது உங்கள் பிரதிநிதியிடம் எழுப்ப வேண்டியது உங்களின் பொறுப்பாகும்.

## பயோமெட்ரிக்ஸ்கள்

RPOவுக்கு உங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பயோமெட்ரிக் தகவல்களை (கைரேகைகள் மற்றும் புகைப்படம்) நீங்கள் அனுமதிப்பது RPOவுக்குத் தேவைப்படலாம்.

பயோமெட்ரிக்குகள் மீதான மேலும் தகவல்களுக்கு குடியமர்வு கைரேகை மற்றும் புகைப்பட சரிபார்ப்பு சிற்றேட்டினைப் பார்க்கவும்.

## ஆதரவு நபர்

உங்கள் பிரதிநிதி தவிர ஒரு ஆதரவு நபர் உங்களுடன் நேர்காணலில் கலந்து கொள்ள நீங்கள் கோரலாம். நேர்காணலுக்கு குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்பாக எழுத்துப்பூர்வமாக கோரிக்கையை நீங்கள் வைக்க வேண்டும் மற்றும் உங்களுக்கு ஏன் ஒரு ஆதரவு நபர் தேவைப்படுகிறார் மற்றும் அந்த நபருடன் உங்களுக்கான உறவுமுறை என்ன என்பதை RPO விடம் அவர் கலந்து கொள்ளமுடியுமா என்பதை முடிவு செய்ய இயலுவதற்காக விளக்கவேண்டும். எந்த வொரு ஆதரவு நபர் அல்லது பார்வையாளரும், பார்வையாளருக்கான ஒரு இரகசியத்தன்மைக்கான ஒரு ஒப்பந்தத்தில் கையொப்பமிடவேண்டும்.

## நேர்காணலில் கலந்து கொள்வது

உங்கள் நேர்காணலில் நீங்கள் கலந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். உங்கள் நேர்காணலில் நீங்கள் கலந்து கொள்ளத் தவறினால் RPOவால் ஏதேனும் கண்டறிதல்கள் பற்றிய உண்மை அல்லது நம்பகத்தன்மையை செய்ய இயலாமல் போகும். உங்கள் கோருதல் அதனால் RPOவால் கிடைக்கப்பெறும் அனைத்துத் தகவல்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

## நேர்காணல் நாளின் போது நீங்கள் உடல் நலமின்றி இருந்தால் என்ன செய்வது

உடல்நலக் குறைவு அல்லது ஊனம் காரணமாக உங்கள் நேர்காணலில் உங்களால் கலந்து கொள்ள முடியவில்லை என்றால், RSBக்கு அதை உடனடியாக நீங்கள் தெரிவிக்க வேண்டும். உங்களின் திட்டமிடப்பட்ட நேர்காணலுக்கான நாளில் 4:00 க்கு பிறகு அல்லாமல் ஒரு பதிவு செய்த மருத்துவரிடமிருந்து ஒரு மருத்துவ சான்றிதழை நீங்கள் பெற்றுத் தரவேண்டும். ஏற்கத்தக்கதாக இருப்பதற்கு மருத்துவ சான்று குறிப்பிட வேண்டியவை:

1. உங்கள் உடல்நலக் குறைவு அல்லது ஊனம்
2. உடல்நலக் குறைவு அல்லது ஊனத்துக்கான எதிர்பார்க்கப்படுகிற காலம்
3. ஏன் நேர்காணலில் பங்கேற்க இயலவில்லை என்பதற்கான, மருத்துவரின் கருத்துப்படியான, காரணம்,
4. நீங்கள் எப்போது குணமாவீர்கள் மற்றும் உங்களால் எப்போது நேர்காணலில் கலந்து கொள்ள முடியும் என்பதற்கான மருத்துவரின் கருத்து

மேலுள்ள வகைப்பாடுகளை மருத்துவ சான்று நிறைவு செய்வதாக RSB தீர்மானித்தால், நேர்காணல் மறுதிட்டமிடப்படலாம்.

### வேறு பிற காரணங்களுக்காக உங்களால் நேர்காணலில் கலந்து கொள்ள இயலவில்லை என்றால் என்ன செய்வது

வேறு ஏதேனும் காரணத்திற்காக உங்களால் நேர்காணலில் கலந்துகொள்ள இயலவில்லை என்றால், திட்டமிடப்பட்ட நேர்காணல் தேதிக்கு குறைந்தது ஐந்து (5) வேலை நாட்களுக்கு முன்னதாக RSBக்கு எழுத்துப்பூர்வமான ஆதரவு ஆதாரம் அளிக்கப்பட வேண்டும். உங்கள் கோரிக்கை ஏற்கப்பட்டால், இயன்ற அளவு முன்னதான தேதியில் உங்கள் நேர்காணல் மறுதிட்டமிடப்படும்.

### 3. நேர்காணல் அறிக்கை மற்றும் இறுதி சமர்ப்பிப்புகள்

உங்கள் நேர்காணலுக்கு மூன்று (3) வாரங்களுக்குப் பிறகு உங்கள் கோருதலின் ஒரு சுருக்கமான அறிக்கையை (நேர்காணல் அறிக்கை) RPO எழுதுவார். இந்த அறிக்கை உங்களுக்கு மற்றும் / அல்லது உங்கள் பிரதிநிதிக்கு அனுப்பிவைக்கப்படும்.

நீங்கள் நேர்காணல் அறிக்கையைப் பெறும் போது உங்களுக்கு அதன் மீது கருத்துத் தெரிவிக்கவும் மேற்கொண்டு உங்கள் கோருதலுக்கு ஆதரவாக ஏதேனும் சமர்ப்பிப்புகளை செய்யவும் மூன்று (3) வாரங்கள் இருக்கும்.

நேர்காணல் அறிக்கை உங்களுக்கு அனுப்பப்பட்டு, தவறான முகவரி காரணமாக அல்லது நீங்கள் அங்கே இனி ஒரு போதும் வசிக்கவில்லை மற்றும் உங்களின் தற்போதைய முகவரியை RSB கொண்டிருக்கவில்லை என்றால், RPO உங்கள் கோருதல் மீதான முடிவை உடனடியாக எழுதத் துவங்குவார்.

உங்கள் நேர்காணல் அறிக்கையை கவனமாகப் படிப்பதும், உங்கள் பதிலில் RPOவுக்கு நீங்கள் சொன்னது பற்றிய சுருக்கம் சரியானதாக இருக்கிறது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா என்பதைத் தெரிவிப்பதும் முக்கியமானதாகும். அது சரியாக இல்லை என்றால், எந்த தகவல் தவறாக உள்ளது மற்றும் அது என்ன சொல்ல வேண்டும் என்பதை நீங்கள் தெரிவிக்க வேண்டும். நேர்காணல் அறிக்கையில் எழுப்பப்படும் மேற்கொண்டு ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகளுக்கும் நீங்கள் பதிலளிக்க வேண்டும்.

### உங்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்தால் அவர்கள் உங்கள் நேர்காணல் அறிக்கைக்கு பதிலளிக்க உதவுவார்கள்.

உங்கள் கோருதல் முடிவு செய்யப்படும் தேதி வரையில் நீங்கள் உங்கள் கோருதலுக்கான ஆதரவு தகவல்களை வழங்கலாம்.

### 4. முடிவு

உங்கள் கோருதல் மீதான முடிவின் ஒரு பிரதியை உங்களுக்கோ அல்லது உங்களின் பிரதிநிதிக்கோ RPO அனுப்புவார்.

RPO ஒவ்வொரு கோருதலையும் அதன் நன்மதிப்புகளைக் கொண்டு மதிப்பிடுகிறார். நீங்கள் அளித்த அனைத்து தகவல்கள் மற்றும் உங்களைப் பற்றி அல்லது உங்கள் தாய் நாட்டினைப் பற்றி அவர் வைத்திருக்கும் வேறு பிற தகவல்களின் அடிப்படையில் RPO முடிவினை எடுப்பார்.

1. உங்கள் வாக்குமூலங்கள் உண்மையானதா/நம்பகமானதா?
2. அகதிக்கான மரபு சட்டப் பிரிவு 1A(2) ல் கொண்டிருக்கும் வகைப்பாடுகளை உங்கள் கோருதல் நிறைவு செய்கிறதா அல்லது பாதுகாக்கப்படுகிற நபருக்கான நிலைக்கு நீங்கள் தகுதியானவரா?

## 2.4 முடிவு

RPO உங்களின் கோருதலை ஒப்புக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ கூடும்.

### நீங்கள் ஒரு அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபராக அங்கீகரிக்கப்பட்டால்

ஒரு அகதியாக அல்லது பாதுகாக்கப்பட்ட நபராக அங்கீகாரம் என்பது நீங்கள் நியூசிலாந்தில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுகிறீர்கள் என்று பொருளாகும். நீங்கள் ஒரு தற்காலிக நுழைவு வகை விசா அல்லது நிரந்த குடியுரிமைக்கான விசாவிற்கு விண்ணப்பிக்க விரும்பினால் உங்கள் அருகில் உள்ள INZயின் விசா கிளைக்கு விண்ணப்பிக்கலாம். குடியுரிமை விசாவுக்கான விண்ணப்பங்கள் மற்றும் நியூசிலாந்தில் குடியேறுவது பற்றிய மேற்கொண்டு தகவல்களை நீங்கள் RSBயிடமிருந்து பெறலம் அகதிகளாக அல்லது பாதுகாக்கப்பட்ட நபராக அங்கீகரிக்கப்பட்ட வயது வந்தோருக்கு முதலில் வேலைக்கான விசாக்கள் வழங்கப்படும். பள்ளி வயதுள்ள குழந்தைகளுக்குப் பொதுவாக மாணவர் விசாக்கள் வழங்கப்படும், அவை ஏதேனும் ஆரம்ப மற்றும் / அல்லது மேனிலைப் பள்ளியில் படிப்பதற்கு அனுமதிக்கும். பள்ளிக்குச் செல்லாத சார்ந்திருக்கும் குழந்தைகளுக்கு வருகையாளர் விசா வழங்கப்படும்.

அதன் பிறகு நீங்கள் ஒரு நிரந்தர குடியுரிமைக்கான விசாவுக்கு விண்ணப்பிக்கலாம். ஒரு குடியுரிமைக்கான விசாவின் செயல்முறைக்குக் காலம் எடுக்கும் மற்றும் அது ஒரு தனியான கூடுதல் நடவடிக்கையாகும். அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நிலை என்பது குடியுரிமைக்கான விசாவிற்கு உத்தரவாதம் அளிப்பதில்லை.

### ஒரு அகதியாக அல்லது பாதுகாக்கப்பட்ட நபராக நீங்கள் அங்கீகரிக்கப்படவில்லை என்றால்

ஒரு அகதியாக அங்கீகரிக்கப்படுவதற்கான ஒரு அடிப்படையை நீங்கள் நிறைவு செய்யவில்லை என்றால் மற்றும் உங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட நபருக்கான தகுதி மறுக்கப்பட்டால், இந்த மறுப்புக்கான காரணங்களை விளக்கும் ஒரு முடிவினை நீங்கள் பெறுவீர்கள்.

RPOவின் முடிவினை மேல் முறையீடு செய்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை உள்ளது மற்றும் இதற்கான கால வரம்புகள் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

உங்களுக்கு ஒரு பிரதிநிதி இருந்தால் அவர்கள் தீர்ப்பாயத்திடம் முறையிடுவதற்காக உங்களுக்கு உதவுவார்கள்.

ஒரு மேல்முறையீட்டினை நீங்கள் செய்தால் உங்களாலும் உங்கள் பிரதிநிதியாலும் உங்கள் கோருதலுக்கு ஆதரவாக RSB யிடம் அளிக்கப்பட்ட அனைத்து தகவல்களை உள்ளடக்கி, INZ கோப்புக்கான ஒரு பிரதி தீர்ப்பாயத்துக்கு அனுப்பப்படும்.

ஒரு மேல்முறையீட்டினை செய்தால் உங்கள் மேல்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை உங்களை நியூசிலாந்திலிருந்து வெளியேற்ற முடியாது.

மேல்முறையீடுகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு தீர்ப்பாயத்தின் வலைதளத்திற்கு வருகை தரவும்: http://www.justice.govt.nz/tribunals/immigration-protection-tribunal/

### உங்கள் மேல்முறையீடு வெற்றி பெறவில்லை என்றால்

உங்கள் மேல்முறையீடு வெற்றிபெறவில்லை என்றால் மற்றும் நீங்கள் ஒரு அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபரல்ல என்று இறுதியாக தீர்மானிக்கப்பட்டால், நீங்கள் நியூசிலாந்தை விட்டு வெளியேற வேண்டியிருக்கும்.

நீங்கள் அல்லது உங்களின் பிரதிநிதி உங்கள் தேர்வுகள் பற்றி விவாதிக்க INZயின் இணக்கக் கிளையை தொடர்புகொள்ள வேண்டும்.

தொலை பேசி: (09) 918 4474 மற்றும் (09) 914 5740

## 2.5 கூடுதல் தகவல்

### நீங்கள் இனி மேல் அடைக்கலம் கோர விரும்பவில்லை என்றால் என்ன செய்வது

செயல்முறைக்கான ஏதேனும் நிலையில், தன்னார்வமாக நியூசிலாந்தை விட்டு வெளியேறுவதற்கான சுதந்திரம் உங்களுக்கு உள்ளது. உங்கள் கோருதல் செயல்முறையில் இருக்கும் போது, நீங்கள் நியூசிலாந்தை விட்டு வெளியேறினால், உங்கள் கோருதல் திரும்பப் பெறப்பட்டதாக கருதப்படும். திரும்பப்பெறுதலுக்கான உங்களுடைய காரணங்களை எழுத்து மூலம் RPOக்கு அறிவுறுத்துவதன் மூலம் எந்த நிலையிலும் உங்கள் கோருதலை நீங்களும் திரும்பப் பெறலாம்.

நியூசிலாந்தில் அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபருக்கான நிலை மறுக்கப்பட்ட ஒரு நபர் நியூசிலாந்தில் இருக்கும் போது வேறு எந்தவொரு வகையான விசாவுக்கும் விண்ணப்பிக்க முடியாது. இந்த விண்ணப்பங்கள் உள்ளடக்குவன: மாணவர், பணி, திறனுள்ள புலம்பெயர்பவர், தொழில் மற்றும் குடியுரிமைக்கான விசாக்கள்.

### அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையர்

நியூசிலாந்தில் உள்ள அகதிகள் தகுதி தீர்மான செயல்முறைக்காக ஒரு கண்காணிப்பு அமைப்பாக ஆஸ்திரேலியாவில் UNHCR செயல்படுகிறது. UNHCR பற்றி மேலும் தகவல்களை அதன் வலைதளத்தில் நீங்கள் அறியலாம்: www.unhcr.org

### அகதி அல்லது பாதுகாப்பு நிலையின் நீக்கம்

பொய்யான வாக்குமூலங்கள் அல்லது மோசடி ஆவணங்களின் அடிப்படையில் நீங்கள் அடைக்கலம் பெற்றிருப்பதாக நிலைநாட்டப்பட்டால், உங்கள் அகதி அல்லது பாதுகாப்பு நிலையை நீக்குவதற்கு RSB முடிவு செய்யலாம்.

RSBயில் கோருதல் தீர்மானிக்கப்படுவதற்காக மேலே கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நான்கு நிலை செயல்முறைகளை காட்டும்படியாக நீக்க செயல்முறைகள் இருக்கும்.

உங்கள் அகதி அல்லது பாதுகாப்பு நிலை நீக்கப்பட்டால் RPOவின் முடிவினை மேல்முறையீடு செய்வதற்கு என்ன உரிமைகள் உள்ளன மற்றும் இதற்கான கால வரம்புகள் என்ன என்பது பற்றி உங்களுக்கு சொல்லப்படும். RPOவினால் அகதி மற்றும் பாதுகாப்பு நிலை நீக்கப்படுவது பொதுவாக தீர்ப்பாயத்துக்கு மேல்முறையீடு செய்யப்படும்.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஒரு RPO உங்களை ஒரு அகதியாக அல்லது பாதுகாக்கப்பட்ட நபராக அங்கீகரிப்பதை நிறுத்தலாம் (அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபருக்கான நிலை இனி ஒருபோதும் தேவையில்லை அல்லது நியாயப்படுத்தப்பட்டால்). இந்த செயல்முறை நீக்க செயல்முறையை போன்றதேயாகும்.

### 2.6 அடுத்துவருகிற அகதி மற்றும் பாதுகாப்பு கோருதல்கள்

அடுத்துவருகிற அகதி மற்றும் பாதுகாப்பு கோருதல் என்பது ஒரு நபரின் கோருதல் RSBயில் மறுக்கப்பட்டு மற்றும் / அல்லது அவர்களின் மேல்முறையீடு தீர்ப்பாயத்தில் வெற்றிகரமாக இல்லை என்ற ஒரு சூழல் நிலையில் மேற்கொண்டு ஒரு அகதி மற்றும் பாதுகாப்பு நிலைக்காக கோருதலைப் பதிவு செய்திருப்பதைக் குறிக்கிறது.

ஒரு அடுத்துவருகிற கோருதலானது குறிப்பிட்ட அடிப்படையை நிறைவு செய்யவேண்டும். RPO திருப்தியடைய வேண்யடிதாவது:

› முந்தைய கோருதல் தீர்மானிக்கப்பட்டதிலிருந்து கோருதலுக்கான பொருள் சூழ்நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் இருத்தல்
› அடைக்கலம் கோருபவரால் கொண்டு வரப்படாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சூழ்நிலைகளில் மாற்றம்
  – ஒரு நல்லெண்ணத்தைக் காட்டிலும் மற்றபடிசெயல்படுதல்; மற்றும்
  – அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபருக்கான அங்கீகாரத்திற்கான அடிப்படைகளை உருவாக்கும் நோக்கத்திற்காக.

பின்வருவனவற்றைக் கோருதல் திருப்திப்படுத்தினால், தொடர்ந்து வரும் கோருதலை கருதுவதற்கு RPO மறுக்கலாம்:

› வெளிப்படையாக பொய்யானதாகவோ அல்லது தெளிவாக பழிச்சொல் பயன்படுத்துவதாகவோ இருந்தால்; அல்லது
› முன்னதாக செய்யப்பட்ட (அடுத்தடுத்தக் கோருதல்களை உள்ளிட்டு) ஏதேனும் கோருதலை திரும்பத் திரும்ப செய்வதாகவோ இருந்தால்



# 3. அடைக்காலம் கோருபவரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள்

### 3.1 உங்கள் உரிமைகள்

நியூசிலாந்தில் ஒரு அடைக்கலம் கோருபவராக, உங்களுக்குள்ள உரிமைகளாவன:

› அகதி மற்றும் பாதுகாப்பு நிலைக்கான உங்களின் கோருதல் இறுதியாக தீர்மானிக்கப்படும் வரை நியூசிலாந்தில் தங்கியிருப்பது
› உங்கள் இனம், பாலினம், வயது, மதம், பாலுறவு சார்பு அல்லது ஏதேனும் ஊனம் பற்றிப் பொருட்படுத்தாமல் நியாயமாகவும் சட்டப்பூர்வமாகவும் நடத்தப்படுவது
› உங்கள் கோருதல் நியாயமாகவும் துல்லியமாகவும் கருதப்படுவது
› ஆலோசனை அல்லது பிரதிநிதித்துவம். உங்களின் வழக்கினைப் பொறுத்து இலவச சட்ட உதவி கிடைக்கப் பெறலாம். மேலும் தகவல்களுக்கு பிரதிநிதித்துவத்துக்கான பிரிவைப் பார்க்கவும்
› பொது நிதியளிக்கப்பட்ட ஆரோக்கியப் பராமரிப்புக்கான அணுகல் (இலவசமாக பார்க்கப்படக்கூடிய, ஆறு (6) வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் தவிர நியூசிலாந்தில் உள்ள மற்ற அனைவரும் மருத்துவரைப் பார்ப்பதற்கு பணம் செலுத்த வேண்டும் என்பதை தயவு செய்து கவனித்தில் வைக்கவும்)
› உங்கள் சொந்த மதத்தினைக் கடைபிடிக்கலாம்
› ஒரு செல்லுபடியாகிற பயண ஆவணம் உங்களுக்கு இல்லையென்றால் ஒரு அடையாள ஆவணம் வழங்கப்படும்.

உங்களுக்கு பணிக்கான விசா வழங்கப்பட்டிருந்தால் உங்களுக்கு இருக்கும் உரிமைகள்:

› ஊதியம் ஈட்டும் வேலைவாய்ப்பில் ஈடுபடுதல் (பணியாளர்களுக்கான உரிமைகள் பற்றிய தகவல்களுக்கு http://mbie.govt.nz/ பார்க்கவும் மற்றும் "பணியாளர்கள் மற்றும் வேலை வாய்ப்புத் தொடர்புகள் ("Labour and Employment Relations") மீதான பக்கத்திற்கு வருகைத் தரவும்).

உங்களுக்கு ஒரு விசா வழங்கப்பட்டிருந்தால் (பணி, வருகையாளர் அல்லது மாணவர்) உங்களுக்குள்ள உரிமைகளாவன:

› பணி மற்றும் வருவாயிலிருந்து நிதி ஆதரவுக்கான அணுகல், நீங்கள் தேவைகளை நிறைவு செய்தால் (உதவிக்கு நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதைப் பார்ப்பதற்காக உங்கள் உள்ளூர் பணி மற்றும் வருவாய் அலுவலகத்துக்கு வருகைத் தரவும்)
› தொடர்புக்கான சுதந்திரம்
› நடமாட்டத்திற்கான சுதந்திரம்
› பள்ளிக்கு செல்லுதல்

ஆதரவு சேவைகள் மீதான மேலும் தகவல்களுக்கு அடைக்கலம் கோருபவர்களுக்கான சேவைகளுக்கான சிற்றேட்டை பார்க்கவும்.

### 3.2 உங்கள் பொறுப்புகள்

ஒரு அடைக்கலம் கோருபவராக உங்கள் பொறுப்புகளாவது:

› நல்லெண்ணத்துடன் செயல்படுவது, RSBயுடன் ஒத்துழைப்பது மற்றும் உண்மையை சொல்வது. ஒரு RPOவிடம் தவறான தகவல்களை அளிப்பது ஒரு குற்றமாகும்
› RPO கோரினால் உங்களின் பயோ மெட்ரிக் தகவல்களை வழங்குவது

- உங்களின் அனைத்து சந்திப்பு நேரங்களுக்கும் வருகைத் தருவது மற்றும் உங்களால் நேர்காணலில் கலந்து கொள்ள இயலவில்லை என்றால் RPOவுக்குத் தெரிவிப்பது ஆகியவற்றை உள்ளிட்டு, உங்கள் கோரிக்கையை தீர்மானிக்கிற RPO, அல்லது உங்களுக்கென்று ஒரு பிரதிநிதி இருந்தால் அவருடன் தொடர்பில் இருப்பது.
- RSBக்கு தங்களின் தற்போதைய முகவரியை அளிப்பது, மற்றும் உங்கள் கோருதல் செயல்முறையில் இருக்கும் போது உங்கள் முகவரியை மாற்றினால் RSBக்குத் தெரிவிப்பது
- உங்கள் அகதி மற்றும் பாதுகாப்புக் கோருதலுக்கான ஆதரவாக கருதுவதற்காக நீங்கள் விரும்பும் அனைத்துத் தகவல்கள், ஆதாரங்கள் மற்றும் சமர்ப்பிப்புகளை அளிக்க வேண்டும்
- உங்கள் கோருதல் செயல்முறையிலிருக்கும் போது உங்கள் விசா செல்லத்தக்கதாக இருப்பதை உறுதி செய்யுங்கள் (உங்களிடம் ஒரு விசா இருந்தால்). இதை உங்கள் அருகில் உள்ள INZ விசா கிளையில் விண்ணப்பிப்பதன் மூலம் செய்யலாம். மேற்கொண்டு தகவல்களுக்கு, தயவு செய்து குடியமர்வு தொடர்பு மையத்தை (09) 914 4100 (ஆக்லாந்து) அல்லது 0508 558855 (நியூசிலாந்தின் பிற பாகங்கள்) மூலம் தொடர்பு கொள்ளவும் அல்லது www.immigration.govt.nz வருகை தரவும்.
- மதச் சுதந்திரம் மற்றும் பாகுபாட்டிலிருந்தான சுதந்திரத்துக்கான மற்றவர்களின் உரிமைகளை மதிப்பதை உள்ளிட்டு, சட்டத்தைப் பின்பற்றவும்,
- உங்கள் குழந்தைகள் நியூசிலாந்தில் இருந்தால் அவர்களை கவனித்துக் கொள்ளவும் (உதாரணமாக, ஒரு பெரியவர் எப்போதும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைளை மேற்பார்வையிட வேண்டும், அவர்கள் ஆறு (6) மற்றும் 16க்கு இடையே இருந்தால் அவர்கள் பள்ளிக்கு செல்ல வேண்டும்)
- உங்கள் கோருதல் மற்றும் ஏதேனும் மேல் முறையீடு வெற்றிபெறவில்லை என்றால் நியூசிலாந்தை விட்டு வெளியேறவும். இறுதியாக நீங்கள் அகதியாகவோ அல்லது பாதுகாக்கப்பட்ட நபராகவோ தீர்மானிக்கப்படவில்லை என்றால், நியூசிலாந்தில் மானியமளிக்கப்பட்ட ஆரோக்கியப் பராமரிப்புக்கு நீங்கள் ஒருபோதும் தகுதி பெற மாட்டீர்கள் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளுங்கள்.



# சொல்விளக்கத் தொகுதி

**அடைக்கலம் கோருபவர்:** தன்னை அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபர் என்று கூறுகிற நபர், ஆனால் அவரின் கோருதல் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

**மரபு அகதி:** ஒரு அடைக்கலம் கோருபவர் ஒரு அகதியாக அங்கீகரிக்கப்படுகிறார். ஒரு அகதி என்பவர் இனம், மதம், தேசிய உரிமை, ஒரு குறிப்பிட்ட சமூகக் குழு அல்லது அரசியல் கருத்துக்கான ஒரு உறுப்பினர் என்கிற காரணங்களுக்காக அடிக்கடித் துன்புறுத்தப்படுவதற்கான நன்கு அறியப்பட்ட அச்சத்துடன் இருக்கும் ஒருவர், அவர் தனது நாட்டிற்கு வெளியே இருக்கிறார் மற்றும் அவரால் அந்த நாட்டில் அத்தகைய அச்சம் காரணமாக, பாதுகாப்பினைப் பெறுவதற்கு இயலவில்லை அல்லது விருப்பமில்லை.

**பாதுகாக்கப்பட்ட நபர்:** ஒரு பாதுகாக்கப்பட்ட நபர் என்பது ஒரு அகதியாக அங்கீகரிக்கப்படுவதற்கான வகைபாட்டினை நிறைவு செய்யமாட்டார், ஆனால் நியூசிலாந்திலிருந்து வெளியேற்றப்பட்டால் அவர் சித்ரவதை, வாழ்க்கைக்கான ஒரு தலைப்பட்சமான கையறுநிலை அல்லது கொடூரமாக நடத்துப்படுத்தலுக்கு உட்படுவதற்கான ஆபத்தில் இருக்கலாம் என்று நம்புவதற்கான போதுமான அடிப்படைகள் இருக்கக் கூடிய ஒரு நபராவார். இந்த நபர் அர்த்தமுள்ள உள்ளூர் பாதுகாப்பை தனது சொந்த நாட்டில் அல்லது தான் வசிக்கும் நாட்டில் பெறவும் முடியாது.

**ஒதுக்கீட்டு அகதி:** நியூசிலாந்தில் வந்தடைவதற்கு முன் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஆணையரால் (UNHCR) அகதியாக ஒரு நபர் தீர்மானிக்கப்பட வேண்டும். "ஒதுக்கீடு" அகதி ஒதுக்கீட்டுக் குடும்ப மறுஇணைப்பையும் உள்ளடக்குகிறது. இந்த மக்கள் வழக்கமாக அகதிகளாக அங்கீகரிக்கப்படுவதில்லை ஆனால் "அகதி போன்ற" சூழ்நிலையில் இருப்பவர்கள், நியூசிலாந்தில் ஒரு நபர் குடியேறுவதற்காக ஒரு ஆதரவளிப்பவர் அவருக்காக விண்ணப்பித்து இருப்பார். ஆதரவளிப்பவர் ஒரு அகதியாக UNHCRஆல் அங்கீகரிக்கப்பட்டிருக்கவேண்டும் மற்றும் அகதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக நியூசிலாந்தில் நிரந்தர குடியேற்ற விசா வழங்கப்பட்டிருக்க வேண்டும். நியமிக்கப்பட்டுள்ள நபர் ஆதரவளிப்பவரின் நேரடிக் குடும்ப உறுப்பினராக இருக்க வேண்டும், மற்றும் நிரந்தர வசிப்பிடத்திற்கான ஆதரவளிப்பவரின் அசல் விண்ணப்பத்தில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆதரவளிப்பவர் நியூசிலாந்தில் வசித்து வரவேண்டும், மற்றும் பொருத்தமான நடத்தைத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும்.

**பிரதிநிதி:** உங்கள் அகதி மற்றும் பாதுகாப்புக் கோருதலுக்குப் பொருந்துகிற சட்டங்கள் மீது உங்களுக்கு ஆலோசனைகள் தருகிற ஒரு நபர், மற்றும் INZ உடன் செயல் மேற்கொள்வதற்கு உங்களுக்கு உதவுபவர். இந்த நபர் ஒரு வழக்கறிஞராக, (நியூசிலாந்து சட்டக் சங்கத்தால் வழங்கப்பட்ட ஒரு வழக்கறிஞராக அல்லது வக்கீல் அல்லது சட்ட முகவராகப் பணியாற்றுவதற்கான தற்போதைய சான்றினை வைத்திருக்கும் ஒருவர்) அல்லது குடியமர்வு ஆலோசனை ஆணையத்தால் உரிமம் வழங்கப்பட்ட ஒரு குடியமர்வு ஆலோசகராக இருக்கவேண்டும்

**சட்ட உதவி:** தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக செலவு செய்ய மக்களுக்கு இயலாத போது அவர்களுக்கு சட்ட உதவியை அளிக்கும் ஒரு அரசு நிதி.

**பயோமெட்ரிக் தகவல்கள்:** ஒரு நபரின் தலை மற்றும் தோள்களை முழுமையாக அல்லது பகுதியாக காட்டும் ஒரு புகைப்படம், அந்த நபரின் கைரேகைகள், கருவிழி ஊடுகதிர்படம்

# தொடர்புகள்

**அகதி நிலை கிளை**

Level 12, 280 Queen Street, Auckland CBD
தபால் முகவரி: PO Box 90533, Victoria Street, Auckland 1142, DX: CX10074

தொலைபேசி: 09 928 2236

தொலைநகல்: 09 914 5298

மின்னஞ்சல்: RSB@mbie.govt.nz

வலைதளம்: www.immigration.govt.nz/branch/RSBHome/

**நியூசிலாந்து குடியமர்வு**
Immigration Contact Centre
தொலை பேசி (ஆக்லாந்திலிருந்து): 09 914 4100

தொலைபேசி (நியூசிலாந்தின் பிற பகுதிகளில் இருந்து): 0508 55 88 55

வலைதளம்: www.immigration.govt.nz

**குடியமர்வு மற்றும் பாதுகாப்பு தீர்ப்பாயம்**

Chorus House, Level 1, 41 Federal Street, Auckland 1010,

தபால் முகவரி: DXEX 11086, Auckland 1142, New Zealand

தொலைபேசி: 09 914 4299

தொலைநகர்: 09 914 5263

மின்னஞ்சல்: IPT@justice.govt.nz

வலைத்தளம்: www.justice.govt.nz/tribunals/immigration-protection-tribunal

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை உயர் ஆணையம்**

Legal Officer
UNHCR Regional Office for Australia, New Zealand, Papua New Guinea and the South Pacific
14, Kendall Lane,
New Acton, ACT 2601
AUSTRALIA

தொலைபேசி: +61 2 6281 9100

தொலைநகல்: +61 2 6247 2933

வலைதளம்: www.unhcr.org

MB12809 JULY 14